

18-2

## The Good Samaritan

## நல்ல சமாரியன்

## லூக்கா 10 : 30 – 37

எனக்கு பிறன் யார்? என்று யார் கேட்டார்களோ அந்த ஜனங்களிடத்தில் இயேசு இந்த கதையைச் சொன்னார்.

எருசலேமிலிருந்து எரிக்கோவுக்கு பிரயாணமாய் போகிற சாலை மட்டும் மிகவும் அபாயகரமான ஒன்றாகும். திருடர்கள் மரங்களுக்கு மத்தியில் மறைந்து கொண்டிருக்கிற சாலையாக அது இருந்தது. ஒரு மனிதன் தனியாக அந்தச் சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்த போது துஷ்ட மனிதர்களால் அடித்து காயப்படுத்தப்பட்டு அவனிடத்திலிருந்து எல்லாவற்றையும் திருடிக் கொண்டு குற்றுயிரும், காயமுமாக அவனை சாலையிலே போட்டு விட்டு போய் விட்டனர். எருசலேம் தேவாலயத்த மனிதர்கள் சாலையின் ஓரத்தில் அந்த மனிதன் இருப்பதை பார்த்தான். நிச்சயமாக அவ்விடத்தில் நின்று அவனுக்கு உதவி செய்திருக்க முடியும். ஆனால் இன்னும் அந்தச் சாலையின் பகுதிகளில் சுற்றிக் கொண்டிருந்த திருடர்களுக்கு அவர்கள் பயந்தார்கள். கடைசியாக ஒரு சமாரியன் அந்த வழியாக வந்தான். அவன் நின்று காயங்களை கழுவி எண்ணெய் வார்த்து காயங்களுக்கு கட்டுப் போட்டான். பிறமு அவனை தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றிக் கொண்டு வந்து ஒரு சத்திரக் காரனிடத்தில் ஒப்படைத்து அவனை பராமரித்தான். மறுநாள் அவர் புறப்பட்டார். ஆனால் சத்திரக்காரன் வசமாய் தேவையான பணத்தைக் கொடுத்து தான் திரும்ப வருமளவும் அவனை பராமரித்து கவனித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு போனார். இப்போது ‘எனக்குப் பிறன் யார்’? என்ற கேள்விக்கு நமக்கு பதில் தெரியும். நம்முடைய உதவி தேவைப்படுகிற அனைவரும் நமக்கு பிறனாயிருக்கிறார்கள்.

### ஜெபம்

கர்த்தாவே ! ஒரு நண்பரைப் போல எங்களுக்கு உதவி செய்யும், இயேசு எங்கள் நண்பராயிருக்கிறார். ஆமென்.

### வளர்ந்த பிள்ளைகளுக்குரிய வேத மனப்பாட வசனம் எபேசியர் 4 : 32

“ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன், உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்”.